த. நா.ச.பே. எண் : 003 (A) நாள் :04.12.2014

முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் உயர்த்துதல் குறித்த அரசினர் தனித் தீர்மானம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் **சட்டமன்றப் பேரவையில் அளித்த** கூடுதல் விளக்கம்

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இங்கே கொண்டுவரப்பட்ட இந்தத் தீர்மானம் விவாதமின்றி ஏகமனதாக நிறைவேற்றப்பெற வேண்டுமென்றுதான் மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் பேசியதற்கெல்லாம் நாங்கள் அமைதியாக இருந்தோம். ஆனால், உண்மைக்கு மாறான பல விஷயங்களை அவர் இங்கே அடுக்கிக் கொண்டேயிருக்கிறார். அவர் பேசி முடித்ததற்குப் பின்னால் நான் பதில் சொல்லலாம் என்று இருந்தேன். ஆனால், இடையில் குறுக்கிட்டு விளக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

2006 பிப்ரவரி 27 ஆம் தேதி, உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு வழங்கப்பட்டது. அந்தத் தீர்ப்பின் அடிப்படையில், அணை பலமாக இருக்கிறது; பூகம்பமே ஏற்பட்டாலும், அணை உடையாது என்ற தீர்ப்பினை 5 ஆண்டு காலம் சட்டப் போராட்டம் நடத்தி, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் பெற்றுத் தந்தார்கள் என்பது வரலாறு. ஏனென்று சொன்னால், நாங்களெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்கள் நடத்திய ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்டு, அவர் வழங்கிய அறிவுரைகளைக் கேட்டிருக்கிறோம். டெல்லியிலிருந்து வழக்கறிஞர் குழுக்களையெல்லாம் அழைத்து, தலைமைச் செயலகத்தில் அமரச் செய்து, மாண்புமிகு அம்மா அவர்கள் சட்ட நுணுக்கங்களையெல்லாம் அவர்களுக்குத் தெரிவித்து, அந்த அடிப்படையில் உச்ச நீதிமன்றத்தில் அந்த வழக்கறிஞர்கள் வாதாடிப் பெற்ற தீர்ப்புதான், 2006 பிப்ரவரி 27–ல் உச்ச நீதிமன்றம் சொன்ன தீர்ப்பு.

எந்தவொரு பிரச்சினையாக இருந்தாலும், இரு மாநிலங்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினையாக வருகின்றபோது, முதலில் மத்திய அரசினுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும். மீண்டும் உச்ச நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டுமென்றால், மத்திய

அரசினுடைய கவனத்திற்கு அது எடுத்துச் செல்லப்படவேண்டும். மத்திய அரசினுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லாமல், நேரடியாக நாம் உச்ச நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்வோமேயானால், முதலில் அவர்கள், 'மத்திய அரசுக்கு இதை எடுத்துச் செல்லுங்கள்; அவர்கள் என்ன பதில் சொல்கிறார்கள்' என்று அறிந்துகொள்ள, அதைத் திருப்பி அனுப்பக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது.

அந்த அடிப்படையில்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் 27–2–2006–ல் பெற்ற தீர்ப்பினை பாரத பிரதமருக்கு கடிதம் வாயிலாகத் தெரிவித்தார்கள். அங்கே செவிடன் காதில் ஊதிய சங்காக இருந்தது. தமிழகத்தில் உங்களுடைய ஆட்சி நடந்துகொண்டிருந்தது. டெல்லி பட்டணத்தில் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி ஆட்சியில் நீங்கள் ஆண்டுகொண்டிருந்தீர்கள். அங்கிருந்து சாதகமான பதில்கூட வரவில்லை. பதிலே வரவில்லை. கேரள அரசுக்கு ஏற்கெனவே 2003 ஆம் ஆண்டில் 'கேரள பாசன நீர் பாதுகாப்புச் சட்டம்' என்ற ஒரு சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டம் 2003 ஆம் ஆண்டில் கேரள அரசால் இயற்றப்பட்ட சட்டம். அந்தச் சட்டத்திற்கு 19–3–2006–ல் ஒரு திருத்தச் சட்டம் amendment கொண்டு வந்தார்கள். அந்தத் திருத்தச் சட்டத்தில் முல்லைப் பெரியாறு அணையின் நீர் மட்டம் 136 அடியாகத்தான் இருக்கும் என்று சட்டம் நிறைவேற்றப்பட்டது.

அதற்குப் பிறகு மாண்புமிகு அம்மா அவர்கள் உடனடியாக பாரதப் பிரதமருக்கு கடிதம் எழுதினார்கள். அதற்கு பதில் இல்லை. 31–3–2006 அன்று கேரள சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட அந்தத் திருத்தச் சட்டம் இந்திய அரசமைப்புச் சட்டத்திற்கு விரோதமானது, அந்தச் சட்டத்தை இரத்து செய்ய வேண்டும் என்று உடனடியாக இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார்கள். இதுதான் வரலாறு.

அதற்குப் பின்னர் தமிழகத்தில் நடந்த சம்பவங்களெல்லாம் உங்களுக்குத் தெரியும். தமிழக சட்டமன்றத்திற்குத் தேர்தல் வந்தது. எதிர்பாராத விதமாக திராவிட முன்னேற்றக் கழகம் மைனாரிட்டி அரசாங்கமாக இந்த சட்டமன்றத்தில் அமர வேண்டிய துர்பாக்கியமான சூழ்நிலை தமிழகத்திற்கு ஏற்பட்டது. 2006 ஆம் ஆண்டிலிருந்து 2011 ஆம் ஆண்டுவரை

நீங்கள் ஆட்சியில் இருந்தீர்கள். நான் ஒரே ஒரு கேள்வியை மட்டும் மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்களிடம் கேட்கின்றேன். இந்த வழக்கு 2006–லிருந்து 2013 வரை நடைபெற்றுக் கொண்டிருந்தபொழுது முல்லைப் பெரியாறு பிரச்சினையில், வழக்குகளில், அது சம்பந்தப்பட்ட விவரங்களில் நீங்கள் முழு மனதுடன் ஈடுபட்டிருந்தால், கேரள அரசு புதிய அணை கட்டப்பட வேண்டுமென்ற கோரிக்கையை வலுவாக சொல்லிக் கொண்டு, டெல்லி பட்டணத்தில் அவர்கள் செல்வாக்கைப் பெறுகின்ற வகையில் மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தினுடைய புதிய அணை கட்டுவதற்கான ஆய்விற்கு ஒப்புதல் கொடுத்தாகிவிட்டது என்று மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிக்கையின் வாயிலாக உங்களிடம் சொல்லி, உங்கள் செல்வாக்கை அங்கு பயன்படுத்தி, அதைத் தடுத்து நிறுத்துங்கள் என்று சொன்னார்கள். உடனே உங்களுடைய தலைவர், அவர் அது மாதிரியான அனுமதி கொடுக்கவில்லை என்று மறுத்தார்கள். நீங்கள் இங்கேயும் ஆளுகின்றீர்கள், டெல்லியிலும் ஆளுகின்றீர்கள். டெல்லியிலே ஆளுகின்ற அரசில் திரு. ஜெய்ராம் ரமேஷ், அப்போது சுற்றுச்சூழல் அமைச்சராக இருந்தார். அவர் அனுமதி கொடுத்த விவரம்கூட உங்களுக்குத் தெரியவில்லை, மறுத்தீர்கள். கடைசியில் அவரே ஒத்துக்கொண்டார். உடனே நீங்கள் என்ன சொன்னீர்கள்? திரு. ஜெய்ராம் ரமேஷை எதிர்த்து நாங்கள் ஆர்ப்பாட்டம் நடத்தப் போகிறோம் என்று சொன்னீர்கள். ஆர்ப்பாட்டம் நடத்தவில்லை. உண்ணாவிரதம் இருக்கப் போகிறோம் என்று சொன்னீர்கள். அதுவும் செய்யவில்லை. கண்டனப் பொதுக்கூட்டம் நடத்துவோம் என்று சொன்னீர்கள். அதையும் செய்யவில்லை. ஆனால், திரு. ஜெய்ராம் ரமேஷை எதிர்த்து தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து மாவட்டங்களிலும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்திய ஒரே தலைவர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள்தான். அப்பொழுதிலிருந்து இந்த இரு மாநிலம் சம்பந்தப்பட்ட வழக்குகளில் நீங்கள் எந்த அளவிற்கு உங்களுடைய பொறுப்புகளை தட்டிக் கழித்து, ஏதோ போனால் போகிறது என்று அதில் involvement இல்லாமல், எப்படி ஆட்சி செய்து தமிழகத்தை ஆண்டீர்கள் என்பதற்கு இதுதான் ஒரு மிகச் சிறந்த உதாரணம் என்பதை இந்த மன்றத்தில் நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். இதையெல்லாம் நான் இந்த பதிலில் சொல்லாததற்குக் காரணம், இந்தத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட வேண்டும் என்ற

ஒரு நல்லெண்ணத்தின் அடிப்படையில்தான். இன்னும் ஏகப்பட்ட பிரச்சினைகள் இந்த வழக்குகளில் இருக்கின்றன. எந்த அளவுக்கு மெத்தனமாக நீங்கள் ஆட்சியில் இருந்தபோது டெல்லியிலும் ஆளுகின்ற பொறுப்பில் இருந்தபோது, தமிழகத்திலும் ஆளுகின்ற பொறுப்பில் இருந்தபோது இந்தப் பிரச்சினைக்கு உங்களால் ஒரு நிரந்தரத் தீர்வை ஏற்படுத்த முடியவில்லை. அதை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் செய்தார்கள் என்ற வரலாறு இருக்கிறது. ஆக தமிழகத்தின் உரிமைகளை, ஜீவாதார உரிமைகளை பெற்றுத் தருகின்ற ஒரே முதலமைச்சர், ஒரெ மக்கள் தலைவர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தான் என்பது இன்றைக்கு நிருபணமாகியிருக்கின்றது. அதுதான் வரலாறு. இந்த வரலாற்றுக்குள் நீங்கள் எல்லாம் உள்ளே குறுக்கு சால் ஓட்ட முடியாது என்பதை மட்டும் நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்பமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவாதம் நீண்டுகொண்டே போகக்கூடாது என்று நினைக்கின்றேன். ஏற்கெனவே, நீங்கள் காவேரி பிரச்சினையில் ஒரு வரலாற்று பிழையையும் நீங்கள் இங்கே செய்திருக்கிறீர்கள். 2007–ல், (குறுக்கீடு) என்னை உட்காருங்கள் என்று நீங்கள் சொல்ல முடியாது.

தீர்மானத்தை ஆதரியுங்கள்.

திரு. துரைமுருகன்: .. .. ..

. . .

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற கூற்று, பரீட்சையில் பெயிலாகி விட்டு, எனக்கு மார்க் போட்டு பாஸ் பண்ண வையுங்கள் என்று சொன்னால், யாராவது ஒத்துக்கொள்வார்களா?

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**